தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 டிசம்பர் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

காவல் துறை பறக்கும் படை

*41 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது காவல் துறையில் " பறக்கும் போலீஸ் படை " எந்தெந்த இடங்களில் பணிபுரிகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவல் துறையில் " பறக்கும் போலீஸ் படைகள் " சென்னை நகரிலும் கீழ்க்கண்ட போலீஸ் மாவட்டங்களிலும் பணிபுரிகின்றன :—

(1) செங்கை கிழக்கு.

(2) மதுரை அர்பன்.

(3) கோயம்புத்தூர்.

(4) சேலம்.

(5) வட ஆர்க்காடு.

(6) திருச்சிராப்பள்ளி.

சேலம் மாவட்டம் சேலம், தர்மபுரி என இரு மாவட்டங்களாகப் பிரிந்த பின்னர், பறக்கும் போலீஸ் படை சேலத்தில் 10 நாட்களும், தர்மபுரியில் 10 நாட்களும் பணிபுரிகிறது.

திரு பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, தற்போது எதிர்க் கட்சிகளால் தூண்டிவிடப்படும் வன்முறைச் செயல்களை உடனுக்குடன் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுக்கும் முறையில் மாவட்டந்தோறும் 'பறக்கும் போலீஸ் படை' அமைத்து, உயர்மட்ட அதிகாரிகளை அதற்கு அதிகாரிகளாக நியமித்து, அதனுடைய அதிகாரத்தையும் அதிகப்படுத்தித் தர அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வியிலே கேட்கப்பட்ட பறக்கும் போலீஸ் படை, போக்குவரத்துச் சட்டங்களை மீறும் வண்டிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும், வரி கொடுக்காமல் சரக்குகளை எடுத்துச் செல்லும் வண்டிகளைத் தடுத்து நிறுத்தி நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய வன்முறைச் செயல்கள் புரிந்தவர்களைக் கண்காணிப்பதற்குக் காவல் துறையினர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, the only question I want to ask is, whether the Hon. Member is entitled to say—

"எதிர்க்கட்சிகளால் தூண்டி விடப்படும் வன்முறைச் செயல்கள்."

According to us, the ruling party is responsible for these வன்முறைச் செயல்கள். Will the Hon. Chief Minister tell us whether it is the ruling party or the எதிர்க் கட்சிகள் which are responsible for it and whether that supplementary would arise out of the main question. That is the only point of order I want to raise.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே யாருக்குப் பொறுப்பு இருக்கிறது என்பது பிரச்னையல்ல. அந்தக் காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு யார் தூண்டிவிட்டார்கள் என்ற பதிலைச் சொல்லவில்லை. கேள்வி நேரத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியது போல் அப்படிப்பட்ட கருத்துக்கள் சொல்வதற்கு இடமில்லை என்பதை நான் நன்றாக உணர்கிறேன். யார் தூண்டிவிடுகிறார்களோ, யார் வன்முறைகளில் ஈடுபடுகிறார்களோ, அவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நாக்சலைட் செல், புட் செல் என்று இருப்பது போல, சிலை திருட்டுக்களைக் கண்டுபிடிக்கவும் தனியாக ஒரு செல் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். கணபதி : துணைத் தலைவரவர்களே, போக்குவரத்திலே நடைபெறுகிற குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு பறக்கும் படை இருப்பது போல், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்கு சென்னை நகரத்தில், மற்ற முக்கிய நகரத்தில் அவசரப் போலீஸ் இருப்பது போல், மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் இது போன்ற பறக்கும் படை அல்லது அவசரப் போலீஸ் போடப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது இருக்கின்ற போலீஸ் அணியினரே அந்தக் காரியங்களில் இன்னும் தீவிரமாக ஈடுபடுவதற்கு நாம் வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் நிதி ஆதாரங்களைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRU B. VENKATSWAMY : Sir, may I know from the Hon. the Chief Minister, how many cases have been registered by the Flying Squad in the Dharmapuri and Salem districts ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனியாகக் கேள்வி போட்டால், அதற்கு பதில் அளிக்கலாம்.

திரு கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமீபத்தில் நடந்த கலரவத்தின் காரணமாக போக்கு வரத்துக்கு உபயோகிக்கப்பட்ட வாகனங்கள் அதிகமாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளைத் தடுப்பதற்காக இந்த [பிளையிங் ஸ்க்வாட்] பயன்படுத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைகளுக்காக அந்தப் பறக்கும் படை பயன்படுத்தப்படவில்லை. காவல் துறையினர்தான் அவைகளைக் கண்காணித்தார்கள்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, பறக்கும் போலீஸ் படையின் காரணமாக தமிழக அரசுக்கு எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவரங்கள் இல்லை.

Rural Vigilance Committee

*42 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to constitute Rural Vigilance Committee for each Police Station substituting the existing Village Vigilance Committee ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) காவல் நிலைய அதிகாரி ஒருவரையும் அப் பகுதியின் வருவாய்த் துறை ஆய்வாளர்களையும் 5 கிராம முனிசீப்புகளையும் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை, ஆண்டுதோறும் சுழற்சி முறையில் கிராமக் காவல் நிலையம் ஒவ்வொன்றும் பெற்றிருக்கலாம் என்பதே இச் செயற் குறிப்பு ஆகும்.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, கிராமங்களிலே ஒழுக்கங்களைக் கண்காணிப்பதற்காக அங்கேயிருக்கிற கிராமப் பெரியோர்களே இருக்கிறார்கள். கிராமங்களிலே ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் நகர் பகுதிகளிலே தான் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். பக்கத்தில் இருப்பவர்கள் கூட யார் என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒழுக்கக் கண்காணிப்புக் குழுவை நகரத்தில் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு பகுதியில் இருப்பவர்களைப் பற்றிக் குறை சொல்லிப் பேசக் கூடாது. நாமும் நகர்ப்புறங்களில்தான் வசித்துக்கொண்டிருக்கிறோம்.